بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/05/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுது, தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதியதற்குப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

" நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடிமைத்தனத்தில், ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பணிவு, தன்னடக்கம் குறித்த நிகழ்வுகள் மற்றும் தமது ஜமாஅத்தினருக்குப் பணிவு, தன்னடக்கத்தை கடைபிடிக்குமாறு அன்னார் அறிவுறுத்தியது ஆகியவை குறித்து இன்று நான் சிலவற்றை விவரிப்பேன். (மஸீஹ் மவ்வூத் ஆகிய) அன்னாரது பணிவைக் கண்டு, அல்லாஹ்வே அன்னாருக்கு இந்த சான்றினைஅளித்தான்:

18, மார்ச் 1907 அன்று அன்னாருக்கு ‘உம்முடைய பணிவான வழிமுறைகள் எனக்குப் பிடித்துள்ளன’ என்ற இல்ஹாம் இறங்கியது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

"இந்த எளியவனிடம் எனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்னவென்றால், இந்த எளியவன் தனது ஏழ்மை, பணிவு, இறைவன் மீது நம்பிக்கை வைப்பது, அர்ப்பணிப்பு அத்தாட்சிகள் மற்றும் ஒளிகளின் அடிப்படையில் (ஈஸா நபியின் ஆகிய) மஸீஹின் ஆரம்பகால வாழ்க்கையின் ஒரு முன்மாதிரியாக இருக்கிறான். மேலும், இந்த எளியவனின் இயல்பும் மஸீஹின் இயல்பும் ஒன்றுக்கொன்று மிகவும் ஒத்ததாக அமைந்துள்ளன. அவை ஒரே இரத்தினத்தின் இரு துண்டுகள் அல்லது ஒரே மரத்தின் இரு கனிகள் ஆகும். மேலும் ஆன்மிக ரீதியில் அவை ஒரே மாதிரியானவை. அதாவது இரண்டிற்கும் இடையே மிக நெருக்கமான ஒற்றுமை உள்ளது. அது ஆன்மிகக் காட்சிகளில் மிக நுட்பமான ஒரு தனித்துவத்தைக் கொண்டிருந்தாலும், வெளிப்புறத் தோற்றத்திலும் ஓர் ஒற்றுமையைக் கொண்டுள்ளது. அது எவ்வாறெனில் மஸீஹ் எவ்வாறு ஒரு முழுமையான மற்றும் மகத்தான நபியான மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றுபவராகவும், அவரது மார்க்கத்தின் சேவகராகவும் மற்றும் அவரது இன்ஜீல் தவ்ராத்தின் கிளையாகவும் இருந்ததோ, அதேபோல் இந்த எளியவனும் அந்த மகத்தான (முஹம்மது ஆகிய) நபி (ஸல்) அவர்களின் மிக எளிய தொண்டர்களில் ஒருவனாவான் ; (முஹம்மது நபி ஆகிய) அவரோ தூதர்களின் தலைவரும், அனைத்து இறைதூதர்களின் கிரீடமும் ஆவார்".

ஒருமுறை ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடத்தில் கூறினார்:

"ஹுஸூர் (அலை) அவர்கள் ‘ஹகீகத்துல் வஹி’ என்ற நூலை எழுதுவதிலும், அதன் திருத்தப் பிரதிகளை மீண்டும் மீண்டும் படிப்பதிலும் பெரும் சிரமத்தை

மேற்கொண்டுள்ளார்கள். இதனால் ஹுஸூர் (அலை) அவர்களின் உடல்நிலையும் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, இன்னும் சில நாட்களுக்கு ஹுஸூர் (அலை) அவர்கள முழுமையாக ஓய்வெடுக்க வேண்டும். அதற்கு ஹுஸூர் அவர்கள், நம்முடைய உழைப்பு என்ன பெரிய விஷயம்? நபித்தோழர்களின் உழைப்பை நாம் பார்க்கும்போது நமக்கு வெட்கம் வருகிறது; அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடு இறைவனின் வழியில் தங்களின் உயிர்களையும் அர்ப்பணித்தார்கள் என்று பதிலளித்தார்கள்.

ஓர் இடத்தில் அன்னார் (அலைஹிஸ்ஸலாம்) கூறுகிறார்கள் : “குறைமதியுடையவர்கள் நான் எனது தகுதிகளை வரம்பு மீறி உயர்த்துவதாக என் மீது ஆட்சேபிக்கிறார்கள். இறைவனின் மீது ஆணையாகக் கூறுகிறேன்: எனது இயல்பிலும் குணத்திலும் என்னை நானே புகழ்ந்து கொள்ள வேண்டும் என்றோ, அல்லது எனது பெருமையை வெளிப்படுத்த வேண்டும் என்றோ எனக்கு எவ்வித ஆசையும் இல்லை. நான் எப்போதும் பணிவையும் எளிமையான வாழ்வையும் விரும்புகிறவனாகவே இருந்து வருகிறேன். ஆனால், இது எனது அதிகாரத்திற்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட விஷயம் .இறைவன் என்னை அவனாகவே வெளியே கொண்டு வந்து, தனது வேதத்தில் எனக்காக எந்த அளவிற்கு புகழையும் பெருமையையும் இறக்கியருளினானோ , அவ்வனைத்து புகழும் பெருமையும் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடையதாகவே இருக்கிறது.”

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு புதிய முஸ்லிமான முஹம்மது அப்துல் ஹக் என்பவரிடம், நம்முடைய கொள்கைகளில் ஒன்று நாம் எளிய வாழ்க்கை வாழ வேண்டும். இன்று ஐரோப்பிய நாடுகள் தங்களின் வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளாக ஆக்கிக் கொண்ட ஆடம்பரங்கள் மற்றும் சடங்குகளிலிருந்து நமது சபை தூய்மையானது. சடங்கு, சம்பிரதாயங்களை நாம் பின்பற்றுவதில்லை.......நாம் உண்ணுதல், பருகுதல், அமருதல் மற்றும் பழக்கவழக்கங்கள் என அனைத்திலும் எளிய வாழ்க்கையையே விரும்புகிறோம் என்று கூறினார்கள்.

ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “பணிவை மேற்கொள்ள வேண்டும். பணிவைக் கற்றுக்கொள்வது ஒன்றும் கடினமான விஷயம் அல்ல. அதனை கற்பது என்பது என்ன! மனிதனே பலவீனமானவன் ஆவான். அவன் பணிவுக்காகவே படைக்கப்பட்டுள்ளான்.” மேலும் கூறினார்கள்: “தங்களை எல்லாரையும் விட தாழ்ந்தவர்களாகவும், சிறியவர்களாகவும் கருதி, வெட்கத்தோடும் பணிவோடும் பூமியில் நடப்பவர்களே அருளுக்குரியவர்கள் ஆவர். மீண்டும் மீண்டும் நான் கூறுகிறேன்: இத்தகைய மக்களுக்காகவே ஈடேற்றம் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது".

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

“சில மக்கள் ஆண்டு மாநாடு நடக்கும் நாட்களில் முன் வரிசை நாற்காலிகளிலோ அல்லது கிரீன் ஏரியா போன்ற பகுதிகளில் அமர விரும்புகிறார்கள். கலீஃபாவின் உரையை மிக அருகில் இருந்து கேட்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறு விரும்புவது ஒருவகையில் சரிதான். ஆனால், சில சமயங்களில் இதில் சுயபெருமைகளும் கலந்து

விடுகின்றன. அவ்வாறு இருக்கக் கூடாது. ஏனெனில், இதனால் ஏற்பாட்டாளர்களுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன."

ஹுஸூர் அவர்கள் அறிவுறுத்துகிறார்கள்:

"ஒரு மனிதன் எங்குச் சென்றாலும் தனக்காக மிகத் தாழ்வான இடத்தையே தேர்ந்தெடுக்க வேண்டும் .அவன் வேறு இடத்திற்கு தகுதியானவனாக இருப்பார் என்றால், உபசரிப்பவரே அவனைத் தேடி வந்து இடத்தை வழங்கி விடுவார்." மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு மனிதனுக்குள் இரண்டு குணங்கள் ஏற்படும் வரை அவனால் இறை அன்பையும் இறை திருப்தியையும் பெற முடியாது: முதலாவது அகந்தையை உடைக்க வேண்டும்...... இரண்டாவது, அசுத்தங்கள் மற்றும் இறைவனது அதிருப்திக்குக் காரணமாக இருக்கின்ற அனைத்து உறவுகளும் முற்றிலும் முறிந்து விட வேண்டும்".

மேலும் அவர்கள் கூறினார்கள்: "பைஅத் செய்த பிறகும் தன் மனதில் சுயநலத்தை வைத்திருப்பவருக்கு ,ஒருபோதும் நன்மை இடப்பதில்லை. நீங்கள் எந்த அளவிற்குப் மென்மையைக் கடைப்பிடிப்பீர்களோ, எந்த அளவிற்கு எளிமையையும், பணிவையும் கடைப்பிடிப்பீர்களோ அந்த அளவிற்கு இறைவன் உங்களுடன் மகிழ்ச்சியாக இருப்பான்".

மனிதன் என்பவன் ஒரு பலவீனமான படைப்பு. அவன் தனது தீய செயல்களின் காரணமாகத் தன்னைத் தானே பெரியவனாகக் கருதத் தொடங்கி விடுகிறான். இந்தத் தீய செயல்களினாலேயே அவனிடம் பெருமையை உருவாகி விடுகிறது. கர்வம் மற்றும் அகந்தை அவனுள் வந்து விடுகிறது. அல்லாஹ்வின் வழியில் மனிதன் தன்னைத்தானே சிறியவனாக கருதாதவரை அவன் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியாது.

பிறகு, பணிவை மேற்கொள்வதை வலியுறுத்தி, ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"இன்னும் நமது ஜமாஅத்தில் பலர் இருக்கிறார்கள்; அவர்கள் தங்களுக்கு எதிராக ஒரு சிறிய விஷயத்தைக் கேட்டாலும் ஆவேசமடைந்து விடுகிறார்கள். ஆனால், இயல்பில் சகிப்புத்தன்மையும் நிதானமும் ஏற்படுவதற்காக இத்தகைய உணர்ச்சிகளை அடக்குவது மிகவும் அவசியமாகும் .ஒரு சிறிய விஷயத்தில் விவாதம் தொடங்கும் போது, மற்றவரை வீழ்த்திவிட்டு நான் எப்படி வெற்றியாளராக ஆவது என்ற கவலையே ஏற்படுகிறது என்பதைப் பார்க்க முடிகிறது.

ஆனால் இத்தகைய சந்தர்ப்பங்களில் உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்க்க வேண்டும். மேலும் குழப்பத்தை நீக்குவதற்காக ,சின்னச் சின்ன விஷயங்களில் தெரிந்து கொண்டே தாழ்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். தன் சகோதரனை அவமானப்படுத்தும் நோக்கில் அவனுக்கு எதிராகப் போட்டியிட ஒருபோதும் முயற்சிக்கக் கூடாது .நாம் ஆராய்ந்து பார்த்தால், நமது வாழ்க்கையில் பொய்யான தன்மானத்தைக் கொண்டுள்ள பலர்

இருக்கிறார்கள். மேலும் தான் என்ற அகந்தை காணப்படுகின்றது. இதனால் சண்டைகளும் அதிகரிக்கின்றன. ஆனால் இறைவனின் நெருக்கத்தைப் பெற வேண்டுமானால், இதிலிருந்து விடுதலை பெற வேண்டும். இன்னும் கூறுவதென்றால், சிலர் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்க முயற்சிக்கிறார்கள்; சில சமயங்களில், 'அவர் என்னுடன் இன்ன இடத்தில் சண்டையிட்டார்; இன்ன இடத்தில் என்னை வசைபாடினார்; எனவே இப்போது நான் அவரை ஏதேனும் ஒரு தவறான வழியில் ஏதேனும் ஒரு பொய் வழக்கிலோ அல்லது தண்டனையிலோ மாட்டிவிட முயற்சிப்பேன்' என்றுதவறான வழியில் புகார் கூறுகிறார்கள்".

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத்) அலை (அவர்கள் கூறுகிறார்கள்:

"அகந்தை உள்ளவன் இறைவனின் அரியணையில் அமர விரும்புகிறான் .எனவே , இந்த மோசமான குணத்திலிருந்து எப்போதும் பாதுகாப்புத் தேடுங்கள். இறைவனின் எல்லா வாக்குறுதிகள் உங்களுடன் இருந்தாலும், அந்த வாக்குறுதிகள் இருந்தாலும் கூட நீங்கள் பணிவைக் காட்டுங்கள்; ஏனெனில் பணிவு காட்டுபவனே இறைவனுடைய நேசத்திற்கு உரியவனாவனாகி விடுகிறான் ".

ஒருமுறை ஹுஸூர் (அலை) அவர்களிடம், 'அனைத்து இறைதூதர்களும் ஆடுகளை மேய்த்துள்ளதாக நபிமொழிகளில் வருகிறதே ,தாங்களும் எப்போதாவது ஆடுகளை மேய்த்திருக்கிறீர்களா?' என்று கேட்கப்பட்டது .அதற்கு ஹுஸூர் அவர்கள் , "ஆம் ! ஒருமுறை நான் வெளியே வயல்வெளிகளுக்குச் சென்றிருந்த போது, அங்கே ஒரு மனிதன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அவன் என்னிடம்' நான் ஒரு வேலைக்காகச் சென்று வருகிறேன்; நீங்கள் எனது ஆடுகளைச் சற்று கவனித்துக் கொள்ளுங்கள்' என்று கூறினான். ஆனால் அவன் மாலை நேரத்தில்தான் திரும்பி வந்தான்; அவன் வரும் வரை அவனது ஆடுகளை மேய்க்க வேண்டியயதாயிற்று "என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் வீட்டின் எந்தவொரு வேலையையும் செய்வதற்கு ஒருபோதும் தயங்கியதில்லை. கட்டில்களைத் தாங்களாகவே விரித்துக் கொள்வார்கள் . தரையை சுத்தம் செய்வார்கள். படுக்கையைச் சரி செய்து கொள்வார்கள் . எந்த வகையான உணவு கிடைத்தாலும் அதை உண்டுவிடுவார்கள் .அவர்கள் ஒருபோதும் 'நீ' என்று பேசியதில்லை ,எப்போதும்' ஜி 'என்றுதான் பேசுவார்கள். அவர்களிடம் அகந்தை பெயரளவிலும் இருந்ததில்லை.

மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டால்வி ஸாஹிப் அவர்கள் டெல்லியிலிருந்து புதிதாகக் கல்வி கற்று வந்தபோது ,அந்தத் தொடக்கக் காலத்தில் ஹுஸூர் (அலை) அவர்களுடன் அவர்களுக்கு ஒரு விவாதம் ஏற்பட்டது. அதில் ஹுஸூர் (அலை) அவர்கள் மௌலவி சாஹிபிடம் ஆரம்பத்தில் அவருடைய கொள்கைகள் குறித்துக் கேள்வி எழுப்பினார்கள். மௌலவி சாஹிப் தனது கொள்கைகளைக் கூறியபோது, ஹுஸூர் (அலை) அவர்கள், உங்களது கொள்கைகளில் ஆட்சேபனைக்குரிய விஷயம் எதுவும் எனக்குத் தெரியவில்லை. எனவே உங்களுடன் விவாதம் செய்ய வேண்டிய

அவசியமில்லை என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்களை அழைத்துச் வந்தவர்கள், இவ்வாறு நாம் தலைகுனிய வேண்டி இருக்கும் என்று கவலையடைந்தனர். ஆனால் ஹுஸூர் (அலை) அவர்கள் தனது பொய்ப் பெருமையைப் பற்றி சிறிதும் கவலைப்படவில்லை. மௌலவி சாஹிபின் கொள்கைகளில் ஆட்சேபனைக்குரியது எதுவுமில்லை என்பதால் அல்லாஹ்வுக்காக விவாதம் கைவிடப்பட்டது என்று ஹுஸூர் (அலை) அவர்களே கூறினார்கள். அன்றிரவு அல்லாஹ் இவ்வாறு இல்ஹாம் இறக்கினான் : 'உம்முடைய இந்தச் செயலால் உமது இறைவன் திருப்தி அடைந்தான். மேலும் அவன் உமக்கு அருளுக்கு மேல் அருளை வழங்குவான்; எதுவரையென்றால், அரசர்கள் உம்முடைய ஆடைகளிலிருந்து அருள்களை தேடுவர்".

மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டால்வி ஸாஹிப் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், அன்னார் தனது பணிவை வெளிப்படுத்தியுள்ளார்கள். அன்னார் எழுதியதாவது, "இந்த எளியவன் ஒரு படிப்பறிவற்ற, பாமர மனிதன் ஆவான்; என்னிடம் வழிபாடும் இல்லை; பயிற்சியும் இல்லை. என்னிடம் கல்வியும் இல்லை; தகுதியும் இல்லை. சுருக்கமாகச் சொன்னால், என்னிடம் ஒன்றுமே இல்லை. அல்லாஹ்வின் புறமிருந்து வந்த உறுதியானதும் தீர்க்கமானதுமான ஒரு விஷயத்தை இந்த எளியவன் உங்களிடம் சேர்த்து விட்டான். அதை ஏற்பதும் மறுப்பதும் அவரவர் கருத்தையும் புரிதலையும் பொருத்தது".

ஹுஸூர் (அலை) அவர்கள் தன்னை 'மஸீஹுக்கு ஒப்பானவர்' என்று வாதிட்டபோது, மௌலவி முஹம்மது ஹுசைன் படால்வி அதை கடுமையாக எதிர்த்தார் . அவர் மிகவும் நாகரிகமற்ற கடிதங்களை எழுதினார். 'இஷாஅததுஸ் சுன்னா' என்ற தனது இதழிலும் அன்னாருக்கு எதிராகப் பண்பற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தத் தொடங்கினார். இவை அனைத்திற்கும் இடையிலும் ஹுஸூர்(அலை) அவர்கள் சகிப்புத்தன்மை, பொறுமை மற்றும் பணிவின் மிக உயர்ந்த முன்மாதிரியைக் காட்டினார்கள்.

ஒரு கடிதத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் மௌலவி முஹம்மது ஹுசைன் படால்வி சாஹிப் அவர்களுக்கு எழுதியதாவது,'எனக்கு வெற்றியிலோ அல்லது தோல்வியிலோ எந்த அக்கறையும் இல்லை; மாறாக அடிமைத்தனத்திலும், கட்டளைகளுக்கு கீழ்ப்படிதலிலும்தான் எனது நோக்கம் உள்ளது. இதற்குப் பின்னால் உள்ள (மௌலவி சாஹிபின்) எண்ணம் நல்லதாகவே இருக்கும் என்பதை நான் அறிவேன்; இருப்பினும், நீங்கள் முதலில் என்னுடன் பேசிவிட்டு, எனது மூன்று புத்தகங்களான' ஃபத்ஹே இஸ்லாம்' ,'தவ்ஸீஹே மராம் 'மற்றும்' இஸாலயே அவ்ஹாம் ' ஆகியவற்றைப் படித்துப் பார்த்துவிட்டு எதையாவது எழுதுவது சிறப்பாக இருக்கும் என்பது என் கருத்து. உங்களைப் போன்ற ஒரு நண்பர் என்னை எதிர்ப்பதற்குத் தயாராக இருப்பதைக் குறித்து எனக்கு எந்த துக்கமும் வருத்தமும் இல்லை. இந்த எதிர்ப்புக் கருத்தும் உண்மைக்காகவே இருக்கும்".

மற்றொரு கடிதத்தில், ஹுஸூர் (அலை) அவர்கள் மௌலவி சாஹிப் அவர்களுக்கு எழுதியதாவது: எனது கருத்தின்படி, ஒழுக்கங்கள் அனைத்தையும் பெறுவதில்

அகங்காரத்திற்கு எதிராக இருக்கும் பணிவு, தாழ்மை மற்றும் தன்னடக்கம் ஆகியவற்றை அல்லாஹ் எந்த அளவுக்கு விரும்புகிறானோ அந்த அளவுக்கு வேறு எந்த பண்பையும் விரும்புவதில்லை.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: "ஹுஸூர் (அலை) அவர்களின் ஒவ்வொரு சொல்லும் செயலும் பணிவின் வெளிப்பாடாகவே நிறைந்திருந்தது .ஒரே ஒரு தேடல்தான் இருந்தது; அது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதும், அவனது ஏகத்துவத்தை உலகில் பரப்புவதுமாகும். நமக்கும் ஹுஸூர் (அலை) அவர்கள் இதையே அறிவுறுத்தியுள்ளார்கள். அல்லாஹ் நமக்கும் இந்த விஷயங்களின்படி செயல்படும் நல்வாய்ப்பைவழங்குவானாக. ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلاَ هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَآ اِلٰهَ اِلاَّ اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**